DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 41/2023**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | துரை | Caste: | |
| Father's Name: | சிங்கபாண்டி | Calling: | கேபிள் உரிமையாளர் |
| Village: | கீழாய்குடி இருப்பு வைகை நகர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 36 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.09.2025

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி வைகை நகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1,2 சாட்சிகளை தெரியும். சாட்சி சுதர்ஷனை தெரியும். எதிரிகளை தெரியும். அ.சா.1 பாலமுருகன் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரிகள் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். கடந்த 01.06.2023ம் தேதி பரமக்குடி காக்காத்தோப்பில் ஒயின்ஷாப்பிற்கு மது வாங்க சென்றேன். அப்போது நேரம் மாலை 5.00 மணி இருக்கம். அப்போது எனக்கும் பரமக்குடி மருதுபாண்டியர் நகரில் வசிக்கும் 2ம் எதிரி அரசுபாண்டி மகன் அருண்குமாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போதே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் ஏற்படுவதற்கு முன்பே நாங்கள் இருவரும் மது அருந்தியிருந்தோம். எங்கள் இருவருக்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருக்கும்போதே அ.சா.1

பாலமுருகன் வந்தார். அ.சா.1 பாலமுருகன் என்னிடம் வா நாம் செல்ல வேண்டிய திருமண விழாவிற்கு செல்வோம் என்று கூப்பிட்டான். அதற்கு 2ம் எதிரி அருண்குமார் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நீ என்னடா கூப்பிடுவது என்று சொல்லி பக்கத்தில் கிடந்த ரீப்பர் சக்கையை எடுத்து பாலமுருகனின் வலது பக்க தலையில் அடித்தார். அதில் அவருக்கு இரத்தம் வந்தது. 1ம் எதிரிக்கும் அன்று நடந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சம்பவ இடத்தில் 1ம் எதிரி இல்லை. நானும் மோகன்ராஜும் விலக்கிவிட்டோம். அங்கு எதார்த்தமாக வந்த பாலமுருகன் ஊரைச் சேர்ந்த சுதர்ஷன் என்பவர் பாலமுருகனை மருத்துவமனைக்கு கூட்டி சென்றார். ரீப்பர் சக்கையை அடையாளம் காட்ட முடியும். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

மதுபானக்கடை கிருஷ்ணா தியேட்டருக்கு எதிர்புறம் ஒன்றும் காக்காதோப்பில் ஒன்றும் உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணா தியேட்டரிலிருந்து காக்காதோப்பு ஒயின்ஷாப் 500மீ தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக யார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் பரமக்குடி அரசு மருத்துவமனையில் வைத்து டிஎஸ்பி என்னை இரவு 7.00மணியளவில் சம்பவம் நடந்த அன்று விசாரித்தார். டிஎஸ்பி விசாரிக்கும்போது பாலமுருகனுக்கு வலப்பக்க தலையில் காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். மதுபானக்கடையில் சுமார் அரை மணி நேரம் மது அருந்திகொண்டிருந்தோம் என்றால் சரிதான். மதுபானக்கடையை விட்டு வெளியில் வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 4-4.30மணி இருக்கும். 2ம் எதிரியும் நானும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்றால்

சரிதான். வைகை நகரிலும் ஒயின்ஷாப் உள்ளது என்றால் பக்கத்தில் உள்ளது. 2ம் எதிரி அருண்குமாருக்கும் எனக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். அ.சா.1 பாலமுருகன் என் நண்பர் என்றால் சரிதான். அவர் பைக் மெக்கானிக் என்றால் சரிதான். அவரது கடையில்தான் எனது பைக்கை வேலைக்கு கொடுப்பேன் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று பாலமுருகனும் மது அருந்தினார் என்றால் சரிதான். அன்றைய தேதி ஏபி ஷா மகாலுக்கு பைக்கில் செல்வதாக இருந்தோம் என்றால் சரிதான். அன்றைய தேதி பாலமுருகன் என்னை பைக்கில் கூட்டி செல்வதற்காகத்தான் வந்தார். நான் சொன்னதுபோல் சொன்ன மாதிரி, சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லைஎன்றாலும் எனக்கும் 2ம் எதிரி அருண்குமாருக்கும் ஏற்கனவே உள்ள விரோதத்தின் காரணத்தை வைத்து பைக்கில் போகும்போது குடிபோதையில் பாலமுருகன் கீழே விழுந்த காயத்தை வைத்து உங்களது தூண்டுதலின்பேரில் 2ம் எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 41/2023**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சுதர்ஷன் | Caste: | |
| Father's Name: | கணேசன் | Calling: | பைக் மெக்கானிக் |
| Village: | முனியாண்டிபுரம், உரப்புளி | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 31 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.09.2025

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் பரமக்குடி தாலுகா உரப்புளி முனியாண்டிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். பைக் மெக்கானிக் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1,2,3 சாட்சிகளை தெரியும். 1ம் எதிரியை தெரியும். 2ம் எதிரியை பார்த்தால்தான் அடையாளம் காட்ட முடியும். அரசுபாண்டி மகன் அருண்குமார் என்று கேள்விப்பட்டுள்ளேன். அ.சா.1 பாலமுருகன் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரிகள் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். கடந்த 01.06.2023ம் தேதி மாலை 5.00 மணியளவில் நான் பரமக்குடி காக்காதோப்பில் உள்ள மதுபானக்கடைக்கு மது அருந்த சென்றேன். அப்போது பாலமுருகன் இரத்தக்காயத்துடன் நின்று கொண்டிருந்தான். அதே இடத்தில் பாலமுருகனின் அண்ணன் மோகன்ராஜும் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் விவரம் கேட்டேன் . அப்போது

மோகன்ராஜ் சந்தை கடையை சேர்ந்த அரசுபாண்டி மகன் அருண்குமார் ஒரு கட்டையால் அடித்துவிட்டதாக சொன்னார். நான் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு பாலமுருகனை கூட்டி சென்றேன். மருத்துவமனையில் இருக்கும்போது டிஎஸ்பி என்னை விசாரித்தார். பாலமுருகனுக்கு இடது பக்க தலையில் இரத்தக்காயம் இருந்தது. காயத்திலிருந்து இரத்தம் வழிந்தது. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

மருத்துவமனைக்கு செல்லும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 7.00 மணி இருக்கும். டிஎஸ்பி என்னை விசாரிக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 7.30 மணி. அ.சா.1 பாலமுருகன் என் மெக்கானிக் ஷாப்பில் தான் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். பாலமுருகனின் சட்டையில் இரத்தம் பட்டிருந்தது என்றால் சரிதான். மோகன்ராஜ் என்னிடம் விவரம் சொன்னபோது சுமார் 5.30 மணி இருக்கும் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நாளில், சொன்ன விதத்தில், நேரத்தில் எதையும் கேள்விப்படவில்லை என்றாலும் எதையும் பார்க்கவில்லை என்றாலும் அ.சா.1 என்னுடன் மெக்கானிக் ஷாப்பில் வேலை பார்க்கிறார் என்றாலும் அவர் என் உறவினர் என்றாலும், நான் சொன்னது போல் அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்து

செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)